30 ஆகஸ்ட்டு 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 22ம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்



மாதாந்திர கருப்பொருள்:

ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு

# நம்மிடமிருந்து ஆண்டவர் எதை எதிர்பார்க்கிறார்?

இயேசுவின் பணி சிலுவையில் அறையப்படுவதோடு முடிவடைவதை பேதுருவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சீடத்துவத்திற்கு இத்தனை வேதனையும் துயரமும் தேவைதானா என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆண்டவர் அதனை தவிர்க்க வேண்டும். அத்துயரங்கள் நிகழ்வது கண்டு பேதுரு கொதிப்படைந்தார்.

**என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்**

– மத். 16:24

நம்மில் பெரும்பாலோரைப் போல், கடவுள் திட்டத்தில் துயரத்தை ஏற்றுக் கொள்ள அவர் தவறிவிட்டார். இந்த அரசில் பங்கு கொள்வது என்பது வெற்றியையும் அதிகாரத்தையும் சார்ந்தது என அவர் நினைத்தார். கிறிஸ்துவின் தரம் இவ்வுலக மாட்சியைச் சார்ந்ததல்ல என்பதை பேதுரு அறியவில்லை. உலகத் தரத்தோடு ஒப்பீடு செய்த பேதுருவை இயேசு கண்டிக்கிறார். “நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்”. துயரத்தை வரவேற்கவும், வேதனையைத் தாங்கி கொள்ளவும் வேண்டுமென இந்த நற்செய்தியின் இறுதியில் இயேசு சவால் விடுக்கிறார். இந்த வாழ்க்கையில் நிலைத்திருக்க விரும்புபவர், நிலைவாழ்வை இழந்து விடுவார்.

சீடத்துவத்திற்கான பாதை நேர்கோடு அல்ல. மனித வாழ்வில் துன்பம் வந்தே தீரும். இவ்வுலகப் பயணத்தில் சோதனையும் கலகங்களும் வரும். நோய், வேலையிழப்பு, உயிரிழப்பு போன்வற்றால் ஏற்படும் வேதனையை நாம் அனுபவித்து இருக்கிறோம். ஓட்டங்கள் திசைமாறும் போது துக்கம் தொடர்ந்தே வரும். இதனால் வேதனையில் கதறுவோம். சிரமத்தைக் கண்டு ஓடுவது இயற்கை. ஆயினும், வேதனையைக் கண்டு ஓடுவதும், ஒளிவதும் நீடித்த இன்பத்தைக் கொடுக்காது.

மனித எதிர்பார்ப்புக்கு நேர்மாறாக கடவுளின் எதிர்பார்ப்பு இருக்குமென்பதால், நேர்மையைக் கடைபிடிப்பது கிறிஸ்துவனுக்கு அழகு. தம்மையே வெறுத்துக் கொள்வது சீடத்துவத்தில் அடங்கியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென இயேசு கூறுகிறார். அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நம்பிக்கையோடு கல்வாரி மலைக்கு சிலுவையைச் சுமந்து செல்ல வேண்டும். கடினமான போதனைதான், ஆயினும் சிலுவைப்பாதையே இறையரசுக்கான வழி.

வாழ்க்கையின் இறுதி இலக்கை மறந்து விடுவது எளிமை என்பதால், நமது சொந்த ஈடுபாடுகள் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்கு இது தக்கத் தருணம்.

மானிட மகன் மாட்சியில் வரும் போது நமது செயல்பாட்டிற்கேற்ப சேவை செய்யும் பெரும் பாக்கியம் கிடைக்குமென எதிர்பார்ப்போம். ✝

**இன்றைய வாசகங்கள்:**

எரே.20:7-9;

திப.62, 2-6, 8-9;

உரோ.12:1-2;

மத். 16:21-27

**வாரம் ஒரு வசனம்**

தம்மையே வெறுத்துக் கொள்வது சீடத்துவத்தில் அடங்கியுள்ளது

INTERNAL CIRCULATION ONLY
BUL 35/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
**மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்**
*2020 ஆகஸ்டு (ஆவணி) மாதத்தின் கருப்பொருள்:*
**ஒருமைப்பாட்டை நோக்கிய குணமளிப்பு**

**பங்கு அலுவலக நேரம்**

திங்கள் - வெள்ளி: காலை 9.00 - மாலை 5.30

சனி, ஞாயிறு: காலை 9.00 - மதியம் 1.30

(மறு அறிவித்தல் வரை)



இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: **பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு 29 – 30 ஆகஸ்டு 2020**
எரே 20: 7-9 தி.பா: 63: 1, 2-3, 4-5, 7-8 உரோ 12: 1-2 மத்தேயு 16: 21-27
**“ கடவுளே ! என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது. ” (தி.பா 63)**

**நிரந்த குடியுரிமை மற்றும் வெளிநாட்டு தொழிலாள சகோதர சகோதரிகளே! அரசாங்கத்தின் வழிமுறைப்படி மறு அறிவிப்பு வரும் வரை, நீங்கள் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்துகொள்ள இயலாது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.**

ஆலயத்தில் திருப்பலியில் கலந்துகொள்ள 380 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். கலந்துகொள்ள விரும்புவோர் ஆலயத்தின் அகப்பக்கத்தில் உள்ள தொடர்பை பயன்படுத்தி உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளவும். ***www.visitationseremban.org***

**செப்டம்பர் மாதம் முதல் இணையத்தின் வழி திருப்பலிகள் ஒளிப்பரப்புவது இனி மேல் இருக்காது.**

**திருப்பலிகளின் நேர அட்டவணை:** ஞாயிறு: காலை 7.30 தமிழ் காலை 10.00 ஆங்கிலம் பகல் 12.00 ( மாண்டரின்) - ஒருவாரம் மாண்டரின் அடுத்த வாரம் தேசிய மொழி என்று நடைபெறும். அவ்வப்போது மொழி வாரியாக நடைபெறும் திருப்பலிகள் வரும் வாரங்களில் மாற்றம் காணும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| பங்கு காணிக்கை | **23/8/20 : RM3,914.25** | ஆராதனை அறை விசேட காணிக்கை | **23/8/20 : RM927.00** |

மினவுதல் தேவாலயத்தின் திருப்பலிகளை இணையத்தின் வழி காணலாம் **http://live.visitationseremban.org**

கவனிக்கவும்:

1) திருப்பலியில் பங்கெடுக்கும் அனைவரும் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். உங்களுக்கான முகக் கவசத்தை உடன் கொண்டு வரவும்.
2) ஆலயத்தில் 1.30 மணி நேரத்திற்கு முன்னதாக வரவும். இது பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்ள இது அவசியமாகிறது.

- பங்கின் அனைத்து மொழிப் பணிக்குழுக்களும் உங்களுடைய பணிக்குழுப் பொறுப்பாளர்கள் தேர்வை நடத்தி, புதிய தலைமைத்துவத்தை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுகொள்கிறோம். ஏற்கெனவே இருப்பவர்களை மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கெனவே புதிய தலைமைத்துவத்தை தேர்ந்தெடுத்திருந்தால் உங்களுக்கு எங்களின் வாழ்த்துகள். இன்னும் தேர்ந்தெடுக்காதோர், செப்டம்பர் இறுதிக்கும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- உறுதிப்பூசுதல் அருளடையாள 2020 - 75 இளையோர் ஞாயிறு 30, 2020 பகல் 2.00 மணி திருப்பலியில் உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். பெற்றோர்கள், ஞானப்பெற்றோர் , மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் நமது நன்றிகள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
- அன்பான பங்கு மக்களே, பமமே உணவு வங்கிக்கு நீங்களளித்து வரும் மகத்தான ஆதரவுக்கு மிக்க நன்றி. தொடர்ந்து உங்களுடைய ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.**

| | |
|---|---|
| மார்ட்டின் அந்தோனி | இறப்பு: 21/8/20 |
| அருணாச்சலம் நடேசன் | இறப்பு: 21/8/20 |

**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!**

ஆங்கில பாடல் குழுவில் ( ஞாயிறு திருப்பலி காலை 9.00மணி) இணைந்துப் பாட புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ள: திரு. டேனியல் ராம் -012-6588715

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 30 *ஆகஸ்டு*) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேசு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 54,623.00** | **RM 42,208.00** | **RM 12,105.00** |

***உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி. இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!***

**நன்கொடை / காணிக்கைகள் கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி (2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு (4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**உங்களின் கவனத்திற்கு:**

மரித்தோருக்கான சடங்குகள் இல்லங்களில் நடத்தப்படாது. மினவுதல் தேவாலயத்தின் இறந்தோருக்கான சடங்கு அறையில் நடைபெறும். இது உடனடி நடப்புக்கு வருகிறது.

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காரணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
(2) **திருப்பலி ஒப்புக்கொடுத்தல்:** இனிவரும் காலங்களில் இணையத்தின் வழி பணம் செலுத்த வேண்டாம். ஆலய அலுவலகத்தை நாடவும். அலுவலகம் திங்கள் முதல் சனி வரை திறந்திருக்கும்
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.**
serembanvisitation@gmail.com

- **தியான அறை** - எவ்வாறு இந்த அறை தயாராகிறது என்பதை பங்கு முக நூல் மற்றும் இணையத்தின்வழி காணவும்.
- **பங்கின் அனைத்துப் பணிக்குழுக்களின்** தலைமைத்துவமும் மாற்றம் காணவுள்ளது

- அருட்பணி கென்னத் மற்றும் நானும் இணைந்து இதுவரை பல்வேறு பணிக்குழுக்களில் இணைந்து தங்களுடைய வற்றாத உழைப்பைத் தந்த அனைவருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் இறைவன் நிறைவாய் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக! அருட்பணி சேவி.

- அன்பு பங்கு மக்களே, பங்கு குருவானவரைச் சந்திக்க ஆலய அலுவலத்தைத் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளுங்கள். குருவானவரின் தனிப்பட்ட கைபேசிக்கு அழைப்பதை தயவு செய்து தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

முதியோர்களுக்கான திருமுழுக்கு அருளடையாளங்களின் கொண்டாட்டங்கள்

13-09-2020 காலை 9.30 (ஆங்கிலம்)
20-09-2020 பகல் 12.30 ( மாண்டரின்)
27-09-2020 காலை 7.30 ( தமிழ்)